# திருப்புதல் தேர்வு - 2

**பாடம் : தமிழ்** **மதிப்பெண்கள்: 25**
**வகுப்பு: 7** **நாள்:12.03.24**

**I. பின்வரும் உரை நடைப் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** **(5x1=5)**

மெழுகுவர்த்தியின் வரலாறு 2000 ஆண்டுகள் பழமையானது. ஆரம்ப காலத்தில் பருத்தி மற்றும் சணல் இழைகளை மிருகக் கொழுப்பில் முக்கி மெழுகுவர்த்தியாகப் பயன்படுத்தினார்கள். இது விலை அதிகமுடையதாக இருந்தது. இப்போதுள்ள வார்ப்பு முறையில் மெழுகு தயாரிக்கும் வழிமுறை 17ஆம் நூற்றாண்டில் அறிமுகமானது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சூயர்லா பிரெஷ் என்பவர் வார்ப்புகளில் விலங்குக் கொழுப்பை ஊற்றி மெழுகுவர்த்தி உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.

ஆரம்பத்தில் திரிகளை அடிக்கடி ஒழுங்கு செய்துதான் மெழுகுவர்த்தி எரிக்க வேண்டியிருந்தது.பாரிசைச் சேர்ந்த ஜாக்குலின் காம்பாசொஸ் என்பவர் 1824 பின்னல் போட்ட திரியை உருவாக்கி மெழுகுவர்த்தியில் பயன்படுத்தினார். மிருகங்களின் கொழுப்புக்கு பதில் மெழுகுவர்த்தி பயன்படுத்தும் முறை 19 ஆம் நூற்றாண்டில் தான் அறிமுகமானது. ஸ்காட்லாந்து ஜேம்ஸ் எங் 1850 இல் நிலக்கரியில் இருந்து பார்பின் மெழுகை உருவாக்கிச் சாதனை படைத்தார்.

**வினாக்கள்:**

1. மெழுகுவர்த்தியின் வரலாறு எத்தனை ஆண்டுகள் பழமையானது?
2. ஆரம்ப காலத்தில் மெழுகு எதிலிருந்து பெறப்பட்டது?
3. பின்னல் போட்ட திரி எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
4. விலங்குக் கொழுப்பை வார்ப்புகளில் ஊற்றி மெழுகுவர்த்தி உருவாக்கும் முறையை கண்டுபிடித்தவர் யார்?
5. மிருகங்களின் கொழுப்புக்கு பதில் மெழுகு பயன்படுத்தும் முறை எந்த நூற்றாண்டில் அறிமுகமானது?

II. **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எடுத்து எழுதுக.**

**(4x3=12)**

1. காயிதே மில்லத் அவர்களைப் பற்றி அறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் கூறியது யாது?
2. ஆட்சிமொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.
3. நேர்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் காயிதே மில்லத் - விளக்குக.
4. காயிதே மில்லத் அவர்கள் தன் குடும்பத்திலும் எளிமையைக் கடைபிடித்தார் என்பதற்குச் சான்றாக உள்ள நிகழ்வை எழுதுக.

IV. **பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **(1x3=3)**

**1.**



V. **கடிதம் எழுதுக.** **(1x5=5)**

1. உமது பகுதியில் குடிநீர்த்தொட்டி அமைத்துத் தருமாறு ஊராட்சி மன்றத் தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக,

**(உமது முகவரி: அ. பரத் / அ. பார்வதி, எண் 110, வேலன் தெரு, திருச்சி-10)**